# கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.159/2025

## அ.சா.5  (LW 4 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. மூக்கன்** | **தொழில்** | |
| **த/க  பெயர்** | முத்துச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **18.06.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு  10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி VC மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஒட்டன்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். கேட்டரிங் வேலை செய்கிறேன்.  இதற்கு முன்பு கடந்த 1965 ம் வருடம் முதல் 1996ம் வருடம் வரை ஆர்.வி. நகரில் குடியிருந்து வந்தேன். 1998ம் ஆண்டு என்னிடம் போலிசார் கேட்டுக் கொண்டதற்காக எழுதாத பேப்பரில் கையெழுத்து போட்டேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.  காணொலியில் ஆஜரான  எதிரியை தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன்  கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் சம்பவ சமயத்தில்  ஆர்விநகரில் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். அது மலைக்கோட்டையை சுற்றியுள்ள பகுதி என்றால் சரிதான்.  அந்த மலைக்கு கீழே தான் கோட்டைக்குளம் உள்ளது. அதன் அருகில் குமரன் பார்க் உள்ளது. 28 வருடத்திற்கு முன்பாக எங்கள் வீட்டிலிருந்து  மலம் கழிப்பதற்காக கோட்டைக்குளம் குமரன் பார்க் உள்ள பகுதிக்கு செல்ல வேண்டும் என்றால் சரியல்ல.  போலிசார் விசாரணையில் கடந்த 15.04.1998ம் வருடம்  இரவு 11.30மணிக்கு நானும்  இந்திரஜித்தும் சேர்ந்து குமரன் பார்க் பகுதிக்கு பாத்ரூம் போவதற்காக சென்றதாகவும் அப்போது அங்கு சென்ற போது  ரவி, ரமேஷ், ஹக்கீம் ஆகியோர்கள் இருந்ததாகவும், அப்போது அவர்களுடன் சேர்ந்து வழக்கில் இறந்து போன சுரேஷ் குமார் இருந்தார் என்றும் அப்போது அங்கிருந்தவர்கள் சுரேஷ்குமார்  மலைக்கோட்டைக்கு இழுத்து வாருங்கள் என சொன்னதாகவும், அப்போது ஹக்கீம் சுரேஷ்குமாரை கத்தியை வைத்து

வயிற்றுப் பகுதியில் குத்தியதை நானும் இந்திரஜித்தும் பார்த்ததாகவும், ஹக்கீம் சுரேசின் கழுத்தை அறுத்ததை நான் பார்த்தேன் என்றாலும் அப்போது நான் பார்த்துக் கொண்டிருந்ததை ரவி பார்த்து விட்டார் என்றும் ரவி உடனே எங்களை இதை வெளியில் சொன்னால் உங்களை கொலை செய்து விடுவேன் என சொன்னார் என்றால் சரியல்ல. அந்தவிசயத்தை வெளியே சொல்லாமல் மறுநாள் குளத்தில் கிடந்த சுரேஷ்குமாரை நானும் போய் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரவி,ரமேஷ் , ஹக்கீம் ஆகியோர்கள் எங்கள் பகுதியை சேர்ந்த ரவுடி என்பதாலும் அவர்களை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.</u>**

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.18 21:31:35 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.